பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ. வெ .எண். 76 நாள்.05.07.2017

# பெருநகர சென்னை மாநகராட்சியில் "100 மாநகரங்கள் மீண்டெழல் அமைப்புடன்" இணைவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 100 நகரங்கள் மீண்டெழல் அமைப்புடன் உறுப்பினராக இணைவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று (05.07.2017) ரிப்பன் மாளிகையில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், 100 மாநகரங்கள் மீண்டெழல் ஆசிய பசிபிக் வட்டார இயக்குநர் திரு.விக்ரம் சிங் அவர்களுடன் இணைந்து கையெழுத்திடப்பட்டது.

அமெரிக்கா நாட்டில் தலைமையகத்தை கொண்டுள்ள ராக்பெல்லர் பவுண்டேஷன் என்ற சமூக தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் கீழ் இயங்கும் 100 மாநகரங்கள் மீண்டெழல் என்ற அமைப்பு சிங்காப்பூரை தலைமையிடமாக கொண்டு செயல்ப்பட்டுவருகிறது. இந்த அமைப்பானது மாநகரங்கள் சந்திக்கும் எந்த ஒரு இடர்பாடுகளிலிருந்தும் மற்றும் சரிவிலிருந்தும் மீண்டு இயல்பு நிலையை அடைவதற்கு உதவி செய்யும். இந்த அமைப்பில் உறுப்பினராவதன் மூலம் உறுப்பினர் நாடுகளுக்குள் அறிவார்ந்த தொழிற்நுட்பங்களையும், புதுமையான செயல்பாட்டு முறைகளை பரிமாறிக்கொள்ளவும், பெருநகர சென்னை மாநகர பொறியாளர்கள் இயற்கை பேரிடர்களை சமாளிப்பதற்கு தேவையான பயிற்சிகளை வெளிநாடுகளில் பெறுவதற்கும், மீண்டெழவதற்குண்டான திட்டத்திற்கு நிதி ஆதாரம் பெறவும் இந்த அமைப்பு உதவும்.

வர்தா புயல் மற்றும் வரலாறு காணாத பெய்த மழை வெள்ளத்தின் போது அரசு எடுத்த துரித நடவடிக்கையால் பெருநகர சென்னை மாநகராட்சி உடனடியாக இயல்புநிலைக்கு வந்தது. அதனையொட்டி இந்த 100 மாநகரங்கள் மீண்டெழல் அமைப்புடன் ஒப்பந்தம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி எதிர்கொள்ளும் எந்த ஒரு இடர்பாடுகளிலிருந்தும் திறன்பட சமாளித்து இயல்பு நிலைக்கு விரைவில் மீண்டு எழ இந்த அமைப்பு உதவும். இந்த அமைப்பில் உறுப்பினராக இணைவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று (05.07.2017) ரிப்பன் மாளிகையில் கையோப்பமிடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 100 மாநகரங்கள் மீண்டெழல் அமைப்பின் முதன்மை அலுவலராக திரு.கிருஷ்ணமோகன் ராமச்சந்திரன் அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் ஏனைய உறுப்பு நாடுகளில் மேற்கொள்ளும் அறிவார்ந்த தொழில் நுட்பங்களையும், வளர்ச்சி திட்ட பணிகளையும் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் பரிமாறிக்கொள்ளும் பொருட்டு பணிபுரிவார்.

இந்நிகழ்ச்சியின் போது பெருநகர சென்னை மாநகராட்சி, முதன்னை தலைமை பொறியாளர் திரு.புகழேந்தி அவர்கள், தலைமை பொறியாளர் (பாலங்கள்) திரு.சீனிவாசன் அவர்கள், தலைமை பொறியாளர் (கட்டடம்) திரு.மகேசன் அவர்கள், மழைநீர் வடிகால் துறையின் மேற்பார்வை பொறியாளர் திரு.நந்தகுமார் அவர்கள் மற்றும் 100 மாநகரங்கள் மீண்டெழல் அமைப்பை சார்ந்த வல்லுநர்கள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி